Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 49 | மலர் 10
போன் 881 | இதழ் 161
National Tamil Daily | தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சேவை ஆடி 6 ரபி ஆகிர் 24 ஞாயிற்றுக்கிழமை (21-7-68)

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர கோர்ப்பரேஷன்
4, டாம் வீதி கொழும்பு

# மாவட்டசபை மசோதா கைவிடப்பட்டது?

## மந்திரிசபையின் திடீர் முடிவு

### பிரதமர் இன்று வானொலியில் உரை நிகழ்த்துவார்

கொழும்பு, சனி

இன்று மந்திரிசபை கூடியபோது, மாவட்டசபை மசோதாவை முற்றாகக் கைவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரிகிறது. பிரதமர் டட்லிசேனநாயகா இம் முடிவை நாளை ஞாயிற்றுக்கிழமை ஆட்சி மன்றத்தில் தெரிவிப்பாரெனவும், மாவட்டசபை மசோதாவைக் கைவிடுவது பற்றிய நோக்கத்தை இலங்கை வானொலியில் உரைநிகழ்த்துவாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இன்று கொழும்பில் அவசரமாகக் கூடி தங்களை எதிர்நோக்கியுள்ள இக்கட்டான இந்நிலைமையை பற்றி ஆராய்ந்தனர். நாளை ஞாயிற்றுக்கிழமை, பிரதமர் டட்லி சேனநாயக்கா மாவட்டசபை மசோதாவைக் கைவிட்டது பற்றி ஆட்சி மன்றத்தில் தெரிவித்தால் சிம்மாசனப்பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை ஆதரிப்பதில்லையெனவும், ஆதரித்து வாக்களிப்பதில்லையெனவும் முடிவுசெய்துள்ளதாக நம்பகரமாகத் தெரிகிறது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இம் மாவட்டசபை பற்றியும், பிரதமரின் இத்திடீர் முடிவைப்பற்றியும் ஆலோசனை நடாத்திக்கொண்டிருந்தார்கள்.

### பாரதத்தில் மலேஷிய பிரதமர்

புதுடில்லி, ஜூலை 20

மலேஷியப் பிரதமர் திரு துங்கு அப்துல் ரஹ்மான் இன்று பிற்பகல் ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி வந்துசேர்ந்தார். பாலம் விமான நிலையத்தில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி திரு ரஹ்மானை வரவேற்றார். நாளை சட்மண்டுக்குப் பயணமாவார்.



### ஆலயப் பிரதிநிதியை ஜி. ஜி. அழைத்திருக்கிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பிரதிநிதியொருவரை அனுப்பும்படி திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திடமிருந்து கிடைத்த தகவலைத் தொடர்ந்து நேற்று கோயில் பிரதிநிதியொருவர் கொழும்புக்குச் சென்றுள்ளார்.

கோவில் அர்ச்சகர்கள் இம் மாதம் 23-ம் திகதி யாழ்ப்பாணத்தில் திரு. பொன்னம்பலத்தைச் சந்தித்து கோவில் நிலைமை பற்றி விளக்குவார்கள் எனத் தொண்டர் ஒருவர் தெரிவித்தார்.

வழக்கம்போல் தேர்த்திருவிழா நடைபெறுவது சம்பந்தமாக திரு. ஜி ஜி. பொன்னம்பலம் அரசாங்க அதிபரையும், பொலிஸ் அதிபரையும் சந்தித்து ஆலோசனை செய்யவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### 2 சுந்தரலிங்கம், தவராசா அரைமணிநேரம் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், நேற்றுக்காலை 10 மணியளவில் கோவிலுக்குவந்து நேரில் நிலைமையைக் கவனித்தார்.

தொண்டர்சபைத்தலைவர் திரு. சி. சுந்தரலிங்கமும் பொலிஸ் அதிபர் திரு. சுந்தரலிங்கமும் உதவிபொலிஸ் அதிபர் திரு தவராசாவும் சப்பறத்திற்கு அருகில் சுமார் அரைமணி நேரம், நிலைமைபற்றி கலந்துரையாடினார்கள்.

அச்சமயம் தொண்டர் சபைத் தலைவர் சுந்தரலிங்கத்தின் காலில் ஒருவயோதிபர் விழுந்து வணங்கினார். உடனே அவரை திரு சுந்தரலிங்கம் தூக்கி அணைத்து அவரை கோயிலுக்குள் அழைத்துச் செல்லும்படி தொண்டர் ஒருவரிடம் தெரிவித்தார். தொண்டர் அவ்வயோதிபரை கோயிலுக்குள் அழைத்துச்சென்றார்.

வெளியூரிலிருந்துகுடும்பங்களுடன் வந்தவர்கள் எவ்வித கஷ்டமுமின்றி கோவிலுக்குள் சென்று வணங்கினார்கள்.

### தொண்டர்கள்மீது நஷ்டஈடு கோரி 'நோட்டீஸ்'

அளவெட்டி, சனி

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் ஜூலை 1-ம் திகதி ஹரிஜனர்களை தடுத்ததாக 10 தொண்டர்கள் மீது நஷ்டஈடுகோரி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது

புறக்டர் எஸ். மகாதேவா மூலம் இன்று அனுப்பப்பட்ட நோட்டீஸில் தம்மைக் கோவிலுள் செல்லவிடாது தடுத்ததற்காக 5000 நஷ்டஈடுகோரி இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

தொண்டர்களுள் ஒருவரான வி. தம்பிப்பிள்ளைமீது 5 குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### 18 பேர் கைது

புதுடில்லி, ஜூலை 20

புதுடில்லியிலுள்ள சோவியத் தகவல் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்த 18 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தானுக்கு ரஷ்யா ஆயுதம் விற்பனை செய்வது சம்பந்தமாக சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி இந்த ஆர்ப்பாட்டத்தைச் செய்தது.

மாவிட்டபுரம் ஆலயத்தில்

# சத்தியாக்கிரகம் நின்றது: பக்தர்கள் தொகை அதிகரிப்பு

### கதவுகள் மூடியபடி பகல் கார்த்திகைத் திருவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் கடந்த நான்குதினங்களாக நிலவிய குழப்பமான சூழ்நிலை நீங்கி, நேற்றுக்காலை முதல் ஆயிரக்கணக்கான மக்கள் சுவாமிதரிசனஞ்செய்தனர். ஹரிஜனர்களின் சத்தியாக்கிரகம் நேற்று நடைபெறவில்லை. சுமார் 20ஹரிஜனாகள் வெளிவீதியில் கூடி நின்றுவிட்டு நண்பகல் 12 மணிக்கு கலைந்து சென்றனர்.

ஹரிஜனர்கள் நேற்றுமுன் தினம் சத்தியாக்கிரகம் செய்த வெளிமண்டபத்தைச் சுற்றி காட்டுத்தடிகளினால் பலமானவேலி போடப்பட்டிருந்தது. வாசலில் இரும்புக்கம்பிகளால் ஒருதடை போடப்பட்டிருந்தது. 'தேசப்பி, பாதரட்சை அணிந்தவர்கள் உட்செல்லக் கூடாது' என்று போர்ட் தொங்கவிடப்பட்டிருந்தது.

வெளிமண்டபத்தில் குடும்பம் குடும்பமாக வந்து மாவிளக்கு படையல் செய்தார்கள். பெண்கள் குழந்தைகள் வயோதிபர் [illegible] றுக்காலைமுதல் [illegible] நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

ஹரிஜனர்கள் சத்தியாக்கிரகம் செய்த வெளிவீதியில் காங்கேசன்துறை பட்டினசபையினர், தண்ணீர் வண்டிமூலம்தண்ணீர்பாய்ச்சி [illegible] காவடி எடுத்து வந்தனர்.

வெளிமண்டப வாசலில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஒன்றுசேர்ந்து பக்திப் பாடல்கள் பாடிக்கொண்டிருந்தனர். சைவ அனுட்டான சபைத்தலைவர் திரு. எஸ். சிவலிங்கமும், தொண்டர் சபைத்தலைவர் திரு. சி. சுந்தரலிங்கமும் வெளிமண்டபத்தின் அருகில் உள்ள கற்பாறைக்கருகில் நின்று அவதானித்துக்கொண்டிருந்தனர்.

தேரடியில் ஹரிஜனப் பெண்களும் குழந்தைகளும் நின்று தலையில் கைவைத்து வணங்கிக் கொண்டிருந்தார்கள். உள்ளூர் ஹரிஜனங்களும் வெளிவீதியில், கற்பூரம் கொளுத்தி தேங்காய் உடைத்து வணங்கிச்சென்றனர்.

(6 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க - தென் வியட்னும் ஜனாதிபதிகள் ஹொனோலுலுவில் சந்தித்துப் பேசினர்

## பாரிஸ்பேச்சுக்கள் பின்னணியில் வியட்னும் பிரச்னை ஆராய்வு

### தென் வியட்னும் சட்டசபையின் 6 அம்சத் திட்டம்

ஹொனோலுலு, ஜூலை 20

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸனும், தென் வியட்னும் ஜனாதிபதி திரு. வொன் தியூவும் நேற்று இங்கு வியட்னும் பிரச்னையைப் பாரிஸ் பேச்சுவார்த்தைகளின் பின்னணியில் வைத்துப் பொதுவாக ஆராய்ந்தனர்.

பேச்சுக்கள் ஆரம்பிக்கு முன் வெளியிட்ட ஓர் அறிக்கையில், வியட்னும் போரில் அதிக அளவான பொறுப்பை தென் வியட்னும் ஏற்றுக்கொள்ளுமென ஜனாதிபதி திரு. வொன் தியூ குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைகள் மூலம் வியட்னும் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணப்படுமெனத் தாம் நம்பும் அதே நேரத்தில், இத்தகைய தீர்வுக்குப் பின்னும் சர்வதேச உத்தரவாதம் இருக்கவேண்டியது அவசியம் என்று வொன் தியூ மேலும் கூறினார்.

#### ஆறு அம்சத் திட்டம்

தென் வியட்னும் ஜனாதிபதி வொன் தியூ, தென் வியட்னுமிலிருந்து ஹொனோலுலுவுக்குப் புறப்பட முன்னர், தென் வியட்னும் தேசிய சட்டசபை, ஆறு அம்சத் திட்டம் அடங்கிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது.

இந்த ஆறு அம்சத் திட்டத்தில், பாரிஸில் நடைபெறும் வட வியட்னும்—அமெரிக்கப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு கெடு நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும், இதற்கிடையில், தென் வியட்னும் முக்கிய வியட்கொங்கின் தளங்களும், தென் வியட்னும் மீதான தாக்குதல்களும் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும், வியட்கொங்கினருடனான கலப்பு அரசாங்கம் எதையும் தென் வியட்னும் எதிர்பார்ப்பதாகவும், தென் வியட்னுமில் ஓர் இடைநிலைப் பிராந்தியம் பிரகடனப் படுத்தப்படுவதையோ அல்லது நடுநிலைமை நாடொன்று அமைக்கப்படுவதையோ தென் வியட்னும் எதிர்க்குமென்றும், பாரிஸ் பேச்சுவார்த்தைகளில் வியட்னும் பிரச்னை சம்பந்தமாக எடுக்கப்படும் எந்த உடன்பாடும் தென் வியட்னுமினுல் உறுதிப்படுத்தப்படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'தென் வியட்னுமிலிருந்து அமெரிக்காவெளியேறவேண்டும்'

— ஹோசிமின்

ஹனோய், ஜூலை 20

வட வியட்னும் ஜனாதிபதி ஹோ சி மின், "அமெரிக்கர்களுக்கு எதிரான வியட்னும் மக்களின் போர், சகல எல்லைகளிலும் தொடர்ந்து தீவிரப்படுத்தப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

வியட்னும் மீதான 1954ம் வருடத்தைய ஜெனிவா உடன்படிக்கையின் 14வது ஆண்டு தினமாகிய நேற்று நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியொன்றில் ஹோ சி மின் இவ்வாறு கூறினார்.

வியட்னுமில் அமைதி ஏற்படுவதாகுல், வட வியட்னும் மீதான குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்திக்கொள்வதுடன், தென் வியட்னுமிலிருந்து அது தனது துருப்புகளை வெளியேற்றி வியட்னும் மக்களின் தீர்வுக்கு விட்டுவிட வேண்டுமென்றார் திரு. ஹோ சி மின்.

## 'அமெரிக்கஜனாதிபதியாராகினும் வட வியட்னும் நிலை ஒன்றே'

— ஸுவான்தியூ

பாரிஸ், ஜூலை 20

பாரிஸில், வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டுள்ள வட வியட்னும் பிரதிநிதிகள் கோஷ்டித் தலைவர் திரு. ஸுவான் தியூ, வியட்னும் சமாதானத்துக்கு முதற்படியாக வட வியட்னும் மீதான குண்டுவீச்சையும், மற்றும் போர் நடவடிக்கைகளையும் அமெரிக்கா நிறுத்த வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

வியட்னும் சமாதானத்துக்கான இந்த நிபந்தனைகள் மீதான தனது நிலையை அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி யாராக இருந்தாலும் சரி, வட வியட்னும் தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

### மாஸ்கோவில் சைபிரஸ் விவசாயிகள்

மாஸ்கோ, ஜூலை 20

சைபிரஸ் விவசாயிகள் சங்கத்தின் தூதுக்குழுவொன்று மாஸ்கோவை வந்தடைந்தது. சோவியத் விவசாய அமைச்சின் அழைப்பின் பேரில் இருவாரகால விஜயத்தை மேற்கொண்டு இங்கு வந்துள்ள இத்தூதுக்குழுவினர் உக்ரேனிலும், [illegible] யாவிலுமுள்ள [illegible] பண்ணைகளைப் பார்வையிட்டனர்.

### ரஷ்யாவில் மாலிஜனாதிபதி

மாஸ்கோ, ஜூலை 20

மாலிஜனாதிபதி மொடிபோ கெய்டாவும், அவரது பாரியாரும் விமானமூலம் ரஷ்யா வந்தடைந்தனர். மாலி அயல்நாட்டமைச்சரும், இராணுவ ஜெனரலும், மற்றும் சில அதிகாரிகளும் இவர்களுடன் வந்தனர். சோவியத் பிரதமர் உட்பட பல தலைவர்களை இவர்கள் சந்தித்துப் பேசுவர்.

## பாகிஸ்தானுக்கு ரஷ்ய ஆயுதங்கள் விற்பனை பற்றி இந்தியா கவலை

### எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பிரதமர் இந்திரா சந்திப்பு

புதுடில்லி, ஜூலை 20

பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதென்ற ரஷ்யாவின் முடிவுபற்றி, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது, பாகிஸ்தானுக்கு ரஷ்யா ஆயுதங்கள் விற்பது சம்பந்தமாக இந்தியாவின் கவலை, ரஷ்யாவுக்குத் தகுந்த முறையில் தெரிவிக்கப்பட வேண்டுமென்ற பொதுவான கருத்து வெளியிடப்பட்டது. அதே நேரத்தில், ரஷ்ய—இந்திய நல்லுறவைப் பாதிக்கக்கூடிய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படக் கூடாது என்ற அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் கவலையை வெளியிடும் ஏகமனதான தீர்மானமொன்று, இந்திய பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட வேண்டுமெனச் சில தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் இப்படியான ஒரு தீர்மானம் முன்வைப்போதும் செய்யப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டதும், அவர்கள் தமது கருத்தை வலியுறுத்தவில்லை.

இந்தியா, வெளியார் எவரையும் நம்பியிருக்காது. தனது பாதுகாப்புக்கான பலத்தைத் தானே வலுவாக்க வேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

#### இந்திரா உரை

பாகிஸ்தானுக்கு ரஷ்யா ஆயுதங்களை விற்பனை செய்வது பற்றிய இந்தியக் கவலைக்கு பழைய அனுபவம் மேலும் வலுவூட்டுவதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

ஆயுத விற்பனை சம்பந்தமான தனது கருத்துக்களை இந்தியா திட்டவட்டமாக ரஷ்யாவிடம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பாகிஸ்தானுடன் ரஷ்யா நட்புறவை வளர்க்க முற்படுவது குறித்து இந்தியப் பிரதமர் குறிப்பிடுகையில்,

(6-ம் பக்கம் பார்க்க)

## ரஷ்யா வருமாறு செக். தலைவர்களுக்கு மாஸ்கோ அழைப்பு விடுத்துள்ளது

### செக்கோஸ்லாவாக்கியா ஏற்றுக் கொள்ளுமெனத் தெரியவில்லை

பிராக், ஜூலை 20

செக்கோஸ்லவாக்கிய நிலைமை பற்றி ஆராய, ரஷ்யாவுக்கு விஜயம் செய்யுமாறு செக். தலைவர்களை ரஷ்யா அழைத்துள்ளது. பேச்சுவார்த்தைகளை மாஸ்கோவில் அல்லது செக்கோஸ்லவாக்கிய எல்லைக் கருகாமையில் உள்ள ஒரு நகரில் வைத்துக் கொள்ளலாமெனவும் ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

ஆனால், இந்த அழைப்பை செக்கோஸ்லவாக்கியா ஏற்றுக்கொண்டதாக எந்த அறிகுறியும் இதுவரை இல்லை.

கடந்த மாதத்திலும், இம்மாத முற்பகுதியிலும் ரஷ்யா இவ்வித அழைப்பைச் செக்கோஸ்லாவாக்கியாவுக்கு விடுத்திருந்தது. ஆனுல், செக்கோஸ்லாவாக்கியா அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை.

இரு பக்கத்திலும் முழுமையான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்ற தனது விருப்பத்தையும் ரஷ்யா, 'செக்கோஸ்லவாக்கியாவுக்கு அனுப்பியுள்ள அழைப்பில் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், செக்கோஸ்லாவாக்கியத் தலைவர்கள், மற்றைய கம்யூனிஸ்ட் நாட்டுத் தலைவர்களுடன் பிராக்கில் பேச்சுவார்த்தைகள் நடாத்த ஆயத்தம் செய்து வருகிருர்கள். யூகோஸ்லாவிய ஜனாதிபதி திரு. டிட்டோவும், ருமேனிய ஜனாதிபதி திரு. ஸ்டொய்க்காவும் விரைவில் பிராக் வரவிருக்கிருர்கள்.

செக்கோஸ்லாவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி திரு. டுபெக், ஏற்கனவே பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

செக்கோஸ்லாவாக்கியா, முன்னைய நிலைக்கு ஒரு போதும் இனித் திரும்பிச் செல்ல மாட்டாது என்ற திரு. டுபெக்கின் கூற்றை, செக். கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அங்கீகரித்துள்ளது.

நட்புறவு கொண்ட முதலாளித்துவ நாடுகளுடன் செக்கோஸ்லாவாக்கியா பொருளாதாரத் தொடர்புகளை விஸ்தரிக்க விரும்புவதாக செக். பிரதமர் அறிவித்துள்ளார். அதே நேரத்தில், சோவியத் ரஷ்யா உட்படச் சகல கம்யூனிஸ்ட் நாடுகளுடனும் நேசபூர்வமான தொடர்புகளை வைத்துக் கொள்ளவும் செக்கோஸ்லவாக்கியா விரும்புவதாக அவர் கூறியுள்ளார்.

## செக். - ஜெர்மன் எல்லையில் ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

### வட அத்லாந்திக் நாடுகளின் சதித்திட்டம் என்கிறது ரஷ்யா

செக்கோஸ்லவாக்கியா பத்திரிகை ஒன்று, கிழக்கு மேற்கு ஜெர்மனிகளுடனான செக். எல்லையில் ஒளித்து வைக்கப் பட்ட ஆயுதங்கள் சில கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாக அறிவித்தது. இந்த ஆயுதங்களில் இயந்திரத் துப்பாக்கிகளும் அடங்கியிருந்தன. இவை, அமெரிக்காவில் செய்யப்பட்டவையெனக் கருதப்படுகிறது.

இதுபற்றி ரஷ்யப் பத்திரிகையான பிராவ்டா குறிப்பிடுகையில், [illegible] இந்த ஆயுதங்கள் மேற்கு ஜெர்மனியிலிருந்து கடத்தப்பட்டவையாகுமெனக் கருத்து வெளியிட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பாவில் சீர் குலைப்பு வேலைகளுக்கான இரகசியத் திட்டங்களை வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகள் உருவாக்கியுள்ளதற்கான சாட்சியங்கள் ரஷ்யாவுக்குக் கிடைத்துள்ளதாகவும் 'பிராவ்டா' அறிவித்துள்ளது.

ஆனுல், ரஷ்யாவின் இந்தக் குற்றச்சாட்டை ஆதாரமற்றது என அமெரிக்காவின் வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகள் நிறுவன அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ்மக்கள்பெற்ற அதிர்ஷ்டம்'

## வாசிகசாலை ஆண்டு விழாவில் உதவி அரசாங்க அதிபர் உரை

கோப்பாய், சனி

''நமது அரசாங்கத்தாலும் பிரதம மந்திரியாலும் இந்நாட்டு பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காகவே உணவு உற்பத்தியும் விவசாய அபிவிருத்தி இயக்கமும் தீவிரப் படுத்தப் பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ்மக்கள் அதிர்ஷ்டம் பெற்றனர். அகில இலங்கையிலுமுள்ள வாலிப விவசாயிகள் மத்தியிலே உணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையத்தின் 19-வது ஆண்டுநிறைவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து பேசுகையில் யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. பி. முருகேசம்பிள்ளை குறிப்பிட்டார்''.

வலி-கிழக்குக் காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. முருகேசம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில்,

''இன்று உணவு உற்பத்தி இயக்கத்திலே வட இலங்கையே தீவிர முன்னேற்றமடைந்து வரும் நிலையிலுள்ளது. இந்நிலை மேலும் வளர்ச்சியடைந்து அடுத்த 5 ஆண்டுகளில் பொருளாதாரத் துறையில் இலங்கை முழுவதும் தன்னிறைவு பெற்றுத் திகழ வட இலங்கை வாலிப விவசாயிகள் ஆவன செய்தல் வேண்டும்'' என்றார்.

கோப்பாய் கிராமசபை உறுப்பினர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் அட்வகேட் திரு. ஆலாலசுந்தரம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

இவ்விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு திருமதி முருகேசம்பிள்ளை பரிசில்களை வழங்கினார்.

விழாவின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## இன்றைய பலன்

(21 - 7 - 68)

ஆடி மீ 6 உ

ஞாயிற்றுக்கிழமை

திதி- ஏகாதசி பகல் 12-20 மேல் துவாதசி.

நட்சத்திரம்- ரோகணி இரவு 1-03 மேல் மிருகசீரிடம்.

ராகுகாலம் - 4-31 6-01.

சுபநேரம் - 9-01— 10-31.

இன்று பிறந்தவர்களுக்கு: சுபமான வாழ்வு தாராளமாகக் கிடைக்கும். தாம்பத்தியம் சிறக்கும் குழந்தைச்செல்வங்களினால் குதூகலமுண்டு. கலைஞர்கள் போற்றப் படுவார்கள். விவசாயிகளுக்குப் புதுவழி பிறக்கும். விவசாயிகள் வாழ்வில் சமயோகமுண்டு. வைத்தியத்துறையில் நாட்டம் செலுத்துபவர்களுக்குச் செல்வாக்குப் பெருகும். சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுகளுக்கு இடமுண்டு. சகோதரவழியாக சிறிது மனக்கவலை ஏற்படலாம்.

மேஷம்- குமைச்சல் அதிகம். குறைகேட்க நேரிடும்.

ரிஷபம்- கை நிறையப் பணம், கடைவிரிக்கும் உறவு.

மிதுனம்- தொழில் நலன் தொடர்புகள்பெருகும்.

கடகம்- கண்ணிய விருப்பு, கடமையில் ஆர்வம்.

சிம்மம்- தொழில் தொல்லை, துன்பம்தொடரும்.

கன்னி-மாரனின் சுவை, மனை வாழ்வு இனிக்கும்.

துலாம்- கழுகுப் பார்வை, கவலையின் தாக்குதல்.

விருச்சிகம்- அறவழி நாட்டம், அதன்வழி இன்பம்.

தனுசு- வாகனவிருத்தி, வாழ்விலும் இருப்தி.

மகரம்- உள்வீட்டில் பூசல், உபத்திரவ மிகுதி.

கும்பம்- வாசல்வரை ஜலம், வசீகரப்பார்வை.

மீனம்- இன்னலின் பின்னல், இதயபாரம்.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 21—7—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரலமுதம், 8-00 இசைகேளீர். 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 கல்விச் சேவை, 5-15 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 நாகஸ்வரக் கச்சேரி, 6-45 வளம், 7-00 நேயர் விருப்பம், 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பல்கலைக்கழக மாணவருக்கான விரிவுரை, 9-45 உரைச்சித்திரம் 'குலக்கொடி'.

## டிராக்டர் ஆற்றில் பாய்ந்தது

### உயிர்கள் பிழைத்தன

முள்ளியவளை, சனி

டிராக்டர், நாயாற்றில் பாய்ந்தது. சாரதியும், வேறு சிலரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்

முல்லைத்தீவிலிருந்து கொக்குத்தொடுவாய்க்குச் செல்லும் வழியில் உள்ள நாயாறு என்னும் ஆற்றில் ஆற்றுப்பாதையைக் கடந்து கொண்டிருந்த டிராக்டர் பாய்ந்து விபத்துக்குள்ளானது. கரிக்கட்டுமூலை தெற்கு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எப். ஏ. பெரிஞ்டோ என்பவரின் டிராக்டரே விபத்துக்குள்ளானதாகும். டிராக்டரை வாழைக்குலைகள் ஏற்றிக்கொண்டு வந்துகொண்டிருந்தது. சாரதியும் வேறு சிலரும் டிராக்டருடன் கடலில் மூழ்கித் தெய்வாதீனமாக நீந்தி உயிர்தப்பினர். இந்நாயாற்றுப் பாலத்தில் ஒவ்வொரு வருடமும் உயிர்ப்பலி நடந்துவருவதோடு சென்ற மாதமும் மீனவர் ஒருவர் ஆற்றில் மூழ்கி மரணமானது குறிப்பிடத்தக்கது. (உ. நி.)

## புங்குடுதீவு கி. ச. புதிய தலைவர்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவுக் கிராம சபையின் புதிய தலைவராக 11-ம் வட்டார அங்கத்தவர் திரு. கே. மதியாபரணம் ஜே. பி. தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

புங்குடுதீவு கிராமசபையின் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் தலைமையில் புதிய தலைவர் தெரிவு நடைபெற்றது.

உபதலைவராக 4-ம் வட்டார அங்கத்தவரான திரு. வெ. கார்த்திகேசு தெரிவு செய்யப்பட்டார்.

## உப தபாலதிபர்கள் சங்க நிர்வாகிகள்

சுழிபுரம், சனி

அகில இலங்கை தமிழ்பேசும் உப-தபாலதிபர்கள் தொழிற்சங்க புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: சி. மாணிக்கவாசர். நீர்வேலி. தலைவர்: வே. கந்தசாமித்தம்பி. சுன்னாகம், உப்போடை. உபதலைவர்கள்: ஐ. நடராசா, அனலைதீவு க. சிவரத்தினம், குறிகட்டுவான். முகமட் ரசிக். மருதமுனை. காரியதரிசி: எஸ். குலசேகரன், நவாலி. உபகாரியதரிசி: ஏ. கோபாலரத்தினம், நல்லூர். தனாதிகாரி: க. சிவஸ்கந்த, நாகேந்திரமடம். நிர்வாகசபை உறுப்பினர்: சி. இரத்தினசபாபதி, அல்லைப்பிட்டி. எஸ். சேனாதிராசா, முரசுமோட்டை. சந்தன் டயஸ், நானுஓயா. எஸ். இராசநாயகம், கல்குடா. ஜே. ச. வாசிங்டன், புதுக்குடியிருப்பு.

## 8 ஆசிரியர்களுக்கு பிரியாவிடை

நாவலப்பிட்டி, சனி

நம்புப்பிட்டி மகாவித்தியாலயத் தமிழ்ப்பிரிவில் ஆசிரியராகப் பணியாற்றி இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் திரு. க. சத்தியானந்தசிவத்திற்கு வித்தியாலய ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பிரியாவிடை அளிக்கப்பட்டது.

திரு. சத்தியானந்தசிவம் அகில இலங்கை அரசினர் தமிழ் ஆசிரியர் சங்க உதவிப் பொதுக்காரியதரிசி ஆவார். இடமாற்றம் பெற்ற இவ்வித்தியாலய இரு பிரிவுகளையும் சேர்ந்த மொத்தம் 8 ஆசிரியர்களுக்கும் ஒருங்கே பிரிவுபசாரமளிக்கப்பட்டது.

## ''கூட்டுறவு வழி நின்று உழைத்தால் உணவில் தன்னிறைவு காணலாம்''

### கூட்டுறவு விழாவில் காரியாதிகாரி உரை

சுழிபுரம், சனி

''கூட்டுறவு இயக்கம் ஒரு புனிதமான இயக்கம். ஒரு சில சுயநலமிகளின் தவறுதல்களால் கூட்டுறவுக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது எனவும் பாகுபாடு காண்பிக்கப்படுகின்றது எனவும் கூப்பாடு போடுவதை விடுத்து பிழைகளை களையவும், சுயநலமிகளை வெளியேற்றவும் முயலவேண்டும். அன்பு நேர்மை மிகமிக அவசியம். ஒருவர் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும் உழைக்க வேண்டும் அதுவே கூட்டுறவின் இலட்சியமாகும். எமது வாலிபர்கள் கூட்டுறவுவழிநின்று நாட்டின் பொருளாதாரத்துக்காக உழைப்பார்களானால் விரைவில் உணவில் தன்னிறைவு காணும் நாடாக நாம் திகழ்வோம்.''

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற்ற கூட்டுறவுதின விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய வலிமேற்குக் காரியாதிகாரி திரு. மாணிக்கநடராசா குறிப்பிட்டார்.

திருவாளர்கள் எஸ். சிவராசா, த. மயில்வாகனம், சு. சண்முகரத்தினசர்மா, ச. சம்பந்தமூர்த்தி, இ. ஆறுமுகம், பண்டிதை நா. பாக்யம் மற்றும் பலர் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## இஸ்லாமிய சோஷலிஸமுன்னணி நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியின் இரண்டாவது ஆண்டு நிறைவுக் கூட்டம் திரு. எம். எஸ். எல் மரைக்காயர் தலைமையில் நடைபெற்றது. புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுப்பட்டனர்.

தலைவர்: திரு. எம். அப்துல் மஜீத், உபதலைவர்கள். திருவாளர்கள் எம். எஸ், சாகுல் ஹமீது, எம். ஜி. மசூர். இணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள் எச்: எம். இஸ்மாயில், உ. ஹமீது சுல்தான், தனாதிகாரி: திரு. எம். எஸ். எல். மரைக்காயர். உபதனாதிகாரி: திரு, சி எம் சாகுல் ஹமீது எட்டுப்பேர்கொண்ட நிர்வாகக் குழு வொன்றும் தெரிவுப் பட்டது. (கா. நி.)

## அராலி கி. ச. வட்டாரங்கள் அதிகரிப்பு

அராலி, சனி

சனத்தொகை அதிகரிப்பை முன்னிட்டு அராலி கிராம சபை 8 வட்டாரங்களிலிருந்து 13 வட்டாரங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய திட்டப்படி 13 வட்டாரங்களிலும் விரைவில் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. சிறுபான்மையினரும் புதிய கிராமசபையில் அங்கம் வகிக்கும் வகையில் வட்டாரங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. சிறுபான்மையினர் சார்பில் மூவர் பிரதிநிதித்துவம் வகிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

## புதிய நிர்வாகிகள்

அளவெட்டி, சனி

காங்கேசன்துறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நடப்பு வருட உத்தியோகத்தர்கள் வருமாறு:


தலைவர்: நா நடராசா, உபதலைவர்: ந. நாகராசா, காரியதரிசி: சு பூதப்பிள்ளை க.சின்னப்பா, த. அழகசுந்தரம், க. வைத்திலிங்கம், செ. நடராசா, க. தங்கவேலு, செ. பாலசுந்தரம் ஆகியோர் செயற்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப் பட்டனர்.

## தலைமறைவாய் இருந்தவர்கைது

வல்வெட்டித்துறை, சனி

இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தலைமறைவாய் இருந்துவந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த என். லட்சுமணப்பெருமாள் என்பவரை வல்வெட்டித்துறை பொலிஸ் சார்ஜண்ட் திரு. பீற்றர் இங்குள்ள வீடொன்றில் வைத்துக் கைதுசெய்தார்.

கைதுசெய்யப்பட்டநபரை பருத்தித்துறை பதில் நீதிபதி திரு. என். ஏ. இராசரத்தினம்முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதிபதி எதிரியை ரூபா 750 பிணையில் செல்லுமாறும் மீண்டும் அடுத்தமாதம் 18-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30



ரகுநாதன்-சந்திரகலா
நடித்த
நிர்மலா
என். ரி. ஆர். பிலிம்ஸ்
வெளியீடு


# சென். மேரிஸ் சாம்பியன் ஆனது

## "யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்ட தரத்தை உயர்த்த முயல்வேன்"

— திரு. வேணன்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'எமது கடந்த இரண்டரை வருடகால சேவையில் நான் வடமாகாணத்தில் விவசாயம், கலை, விளையாட்டுத்துறைகளின் முன்னேற்றத்துக்கு என்னால் ஆனவற்றைச் செய்துள்ளேன்' என விளையாட்டமைச்சின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதி ஆட்டத்துக்குத் தலைமை வகித்த யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

முதன் முதல் பிரிட்டிஷ் ஆட்சியினரே தம் ஆதிக்கத்தின் கீழுள்ள நாடுகளுக்கு உதைபந்தாட்டப் போட்டியை அறிமுகம் செய்து வைத்தனர். ஆனால் இன்று உலகின் எல்லா நாடுகளிலும் உதைபந்தாட்டப் போட்டியே முன்னணி வகிக்கின்றது. கடந்த காலத்தில் உதைபந்தாட்டத்தில் அக்கறை காட்டாத அமெரிக்காவிலும் இப்பொழுது உதைபந்தாட்டம் மிக வேகமாக முன்னே வருகிறது. உதாரணத்துக்கு இவ்வருட ஆரம்பத்தில் அமெரிக்காவின் தேசிய உதைபந்தாட்டக் கோஷ்டி எமது நாட்டுக்கு சிநேகபூர்வமாக விஜயம் செய்ததைக் குறிப்பிடலாம். யாழ்ப்பாணத்தின் உதைபந்தாட்டத் தரத்தை உயர்த்துவதற்கு விளையாட்டமைச்சின் ஆதரவின் கீழ், திறமைவாய்ந்த பயிற்சியாளரை இங்கு வரவழைக்க நான் ஆவன செய்வேன்'.

இச்சுற்றுப் போட்டியில் 'சாம்பிய'னாக வந்த நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்குத் திருமதி அபயசேகரா வெற்றிக் கேடயம் வழங்கினார். இரண்டாவதாக மன்னார் சென். ஜோசப் விளையாட்டுக் கழகத்துக்கும், மூன்றாவதாக பருத்தித்துறை வதிரி டைமன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

வடமாகாண விளையாட்டமைச்சின் காரியாதிகாரி திரு. ஏ. டி. பி. வேசுதாசன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

[தே. நி]


REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Melina Mercouri &
Peter Ustinov
in
TOPKAPI

மானிப்பாய் வெஸ்லி
தினசரி 6-30, 9-30.
சனி போயா, போயா 2-30
சிவாஜி கணேசன்-விஜயா
நடித்த
செல்வம்

ரஞ்சனி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
பணமா பாசமா

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45 p.m.
Christopherlee
in
BRIDESOF
FUMANCHU
From 22-7-68
ARZOO..


## வரி விளம்பரம்

### தேவை

விவசாய அனுபவமுள்ள மேற்பார்வையாளரும், விவசாய அனுபவமுள்ள 2 குடும்பமும், அக்கராயன்-வேரவில் பகுதியில் உள்ள சாந்தி சேவா சங்க சமத்துக்கு தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். கௌரவ நிர்வாகி, சாந்திநிலையம். உருத்திரபுரம். 1249

நிர்வாக அனுபவமுள்ள 45 வயதுவரையில் உள்ள தமிழ் ஆங்கிலம் தெரிந்த ஒருவர் சாந்திநிலைய மாணவர் இல்லத்துக்குத்தேவை. உத்தியோக ஓய்வுபெற்றவர் விரும்பப்படுவர். கௌரவ நிர்வாகி, சாந்தி நிலையம், உருத்திரபுரம். 1248

யாழ்ப்பாணம் மயிலாளம் புலையிலே ஐக்கிய விவசாய சங்கத்திற்கு பீடி தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் தேவை. சேரவிரும்புவோர் தங்கள் பெயர்விலாசம் முதலியவற்றை சங்கத்தில் 31-7-68-க்குமுன் பதிவு செய்யவும்: ஆ நடராசா, முகாமையாளர், தெக்கிள மேசன் ரோட், யாழ்ப்பாணம். 1247

### விற்பனைக்கு

விதைநெல்:

விதைநெல்லு: மேட்டு நிலக்காணிகளுக்கு சமத்தொழில் இலாகாவினால் விசேடமாக சிபாரிசு செய்யப்படும் 'டிகிவி' இன விதைநெல்லு [காலபோகம்] விற்பனைக்குண்டு. தேவைக்கு விண்ணப்பிக்கவும்: கௌரவ நிர்வாகி, சாந்தி நிலையம், உருத்திரபுரம். 1250

கார்:

B L. தொடரிலக்கம் மொறிஸ்மைனர். பெ, சுந்தரலிங்கம் [டிறக்டர்], பருத்தித்துறை என்பவருடன் தொடர்புகொள்ளவும் 1258

### விற்பனைக்கு

முத்திரைச்சந்தி பஸ் தரிப்பிடத்துக்குமுன், வீடு, கடை, தொழிற்சாலை, டிஸ்பென்சரி, நெசவுசாலை நடத்துவதற்கேற்ற (மூன்றடுக்கு மாடிக்குரிய பவுண்டேசன்) புதுக்கட்டிடம், நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அண்மையில் இணுவில் ருட்பட 4 பரப்புக் காணி, 16 குதிரைப்பவர் றஸ்றன் என்ஜின் ஆகியவை விற்பனைக்குண்டு கூடிய கேள்விக்கு வழங்கப்படும். விபரங்களுக்கு: சி. இராசையா, 223, பருத்தித்துறை வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். 1257

### கல்வி

ஜி. சி. ஈ. சாதாரண, உயர்தர, [Prep] ஆகிய பரீட்சைக்குரிய பிரத்தியேக வகுப்புகளை, ஆகஸ்டு விடுதலைக் காலத்தில் காலையில் நடத்தவிருக்கிறோம். சேர விரும்பும் மாணவர் காலந்தாழ்த்தாது அதிபருடன் தொடர்பு கொள்க:- வித்தியாபவன், கல்விச்சங்கம், பண்டிப்போ ஒழுங்கை, மல்லாகம். 1256

ச. ச. நிலைய

## இல்லப் போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை. சனி

ஊர்காவற்றுறை புனித ஜேம்ஸ் சனசமூக நிலைய 25-வது ஆண்டு விழாவையொட்டு புனித ஜேம்ஸ் சனசமூக நிலைய இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிகளில் மஞ்சள் இல்லம் சாம்பியனானது. சிவப்பு இல்லம் 2-வதாக வந்தது.

போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்:-

100 மீட்டர்- சிரேஷ்ட பிரிவு: எம். மரியவியனி, பி. எவ். சேவியர்.

100 மீட்டர்- கீழ்ப் பிரிவு: சார்ள்ஸ் றொபேர்ட், எஸ். கே. றொசாறியஸ்.

200 மீட்டர்- சிரேஷ்ட பிரிவு: எம். எஸ். ஆகிபேட், பி எவ். சேவியர்.

குண்டு வீசுதல்- சிரேஷ்ட பிரிவு: எம். மரியவியனி, ஏ. எவ். செபமாலைமுத்து.

நீளம் பாய்தல் - சிரேஷ்ட பிரிவு: ஏ. எவ். சேவியர், பி. எவ் சேவியர்.

கீழ்ப்பிரிவினருக்கிடையே நடைபெற்ற 400 மீட்டர் அஞ்சல் ஓட்டத்தில் முதலாம் இடத்தை மஞ்சள் இல்லமும், இரண்டாம் இடத்தை சிவப்பு இல்லமும் பெற்றுக்கொண்டன.

சிரேஷ்ட பிரிவினருக்கிடையே நடைபெற்ற அஞ்சலோட்டத்தில் முதலாம் இடத்தை மஞ்சள் இல்லமும், இரண்டாமிடத்தை சிவப்பு இல்லமும் பெற்றுக்கொண்டன.

இப்போட்டிகளுக்கு வண. பிதா சுவாம்பிள்ளை தலைமை வகித்தார்.

கூடைப்பந்து போட்டி

## சென் பற்றிக்ஸ் கோஷ்டியை சென். ஜோன்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடமாகாண கூடைப்பந்துச் சங்கத்தினரால், யாழ்ப்பாண மாவட்டக் கல்லூரிகளிடையே நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்து சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியும், சென். ஜோன்ஸ் கல்லூரியும் கலந்துகொண்டன. இப்போட்டி சென்பற்றிக்ஸ் கல்லூரி 'லோகிஸ் திடலில்' நடைபெற்றது.

போட்டி ஆரம்பமாகியதும் இரு கோஷ்டியினரும் வேகமாகவும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமலும் விளையாட ஆரம்பித்தனர். இடைவேளையின் போது சென் பற்றிக்ஸ் கல்லூரி 10 புள்ளிகளையும் சென்ஜோன்ஸ் 10 புள்ளிகளையும் பெற்றிருந்தன.

இடைவேளையின் பின் சென். ஜோன்ஸ் கோஷ்டியின் விளையாட்டில் முன்னேற்றம் காணப்பட்டது. இக்கோஷ்டி முன்னணி வீரர்களின் முன்னேற்றத்தை, சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் பின்னணி வீரர்களால் சமாளிக்க முடியவில்லை. சென் ஜோன்ஸ் கோஷ்டியின் புள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்துவண்ணமிருந்தது. போட்டி முடிவடைவதற்கு 15 நிமிடங்கள் இருக்கும்போது, சென்ஜோன்ஸ் கோஷ்டியின் [illegible] சென்பற்றிக்ஸ் கோஷ்டி [illegible] தைப் பயன்படுத்தி தமது புள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தனர். சென்பற்றிக்ஸ் கோஷ்டியின் வீரர் சவுந்தரநாயகமும், சென் ஜோன்ஸ் கோஷ்டிவீரர் சூரியகுமாரும் மிகத்திறமையாக விளையாடி முறையே 10, 10 புள்ளிகளைத் தத்தம் கோஷ்டியினருக்குப் பெற்றுக் கொடுத்தனர். போட்டி முடிவில் சென் ஜோன்ஸ் கல்லூரி சென் பற்றிக்ஸ் கல்லூரியை (31—26) தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திரு. நடராஜாவும், திரு. சபிரியல் பிள்ளையும் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (தே. நி)

### அலங்கார உற்சவம்

புதுக்குடியிருப்பு, சனி

புதுக்குடியிருப்பு சித்தி விநாயகர் கோவில் அலங்கார உற்சவம் இம்மாதம் 30-ம் திகதி ஆரம்பமாகி 8-ம் திகதி தீர்த்த உற்சவத்துடன் முடிவுறும். 6-ம் திகதி வேட்டைத் திருவிழாவும் 7-ம் திகதி தேர்த்திருவிழாவும் நடைபெறும்.


5-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி
(கொழும்பு)
2.00 மாலை 6.00, 9.30.
இந்திய ஜனாதிபதி பரிசு பெற்ற சிறந்தபடம்.
காதல் மன்னன்
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
நடித்த
ஏ. வி. எம்.
புரொடக்‌ஷன்ஸ் ராமு

இப்பொழுது திரையிடப்படுகிறது!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, 10-00.
ஜேம்ஸ் பொண்ட்
★ ஜெய்சங்கர்
★ எல். விஜயலக்ஷ்மி
★ மனோகர்
நடித்த
வல்லவன் ஒருவன்

வின்ஸர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — பி. சரோஜாதேவி
பி. எஸ். வீரப்பா, ஜெயலலிதா, நாகேஷ்
ஆகியோர் நடித்த
அரச கட்டளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அப்பா அடித்த போது அம்மா அழவில்லை"

## பத்மினி குலரத்ன கொலை வழக்கில் அச்சினி சாட்சியம்

கொழும்பு, சனி "எனது அம்மா இராப் போசனமாக பாணும் வாழைப்பழமும் சாப்பிடுவார் எனக்குத் தெரிந்தவரை எனது அம்மா இரவு வேளைகளில் இறைச்சி சாப்பிட்டது கிடையாது. எனது அப்பா அம்மாவுடன் பேசியதை நான் பார்த்ததில்லை.

பத்மினி குலரத்தின கொலை வழக்கு விசாரணையில் நீதிபதியின் கேள்விகளுக்கு டாக்டர் குலரத்தினவின் 12 வயது மகளான அச்சினி மேற்கண்டவாறு நேற்று பதிலளித்தார்.

அச்சினி குலரத்தின சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: சோபியா சமைத்த உணவை தாம் சாப்பிடக்கூடாதென பாட்டி உத்தரவிட்டுள்ளார். பாட்டியின் உத்தரவின்படியே சமையல் வேலை நடைபெறும். சோபியா மீன் சமைப்பார். எங்களுக்கு உணவு சமைக்கும் சிசிலியாவும் மீன்சமைப்பார். ஆனால் சோபியா சமைக்கும் மீன் கறியில், மிளகாய், மல்லி எல்லாம் சேர்க்கப்பட்டிருக்கும். ஆனால் சிசிலியா சமைக்கும் மீன்கறியில் வெறும் தண்ணீரே அதிகமாகக் காணப்படும். அதைத்தான் நானும் அம்மாவும் சகோதரியும் சாப்பிடுவோம். சிசிலியா இரவு வேளைகளில் சமைப்பதில்லை.

எனது அப்பா ஒரு குதிரைச் சவுக்கு வைத்திருக்கிறார். அச்சவுக்கினால் அம்மாவை அடித்திருக்கிறார்.

நீதிபதி: ஏன் அடித்தார்?- அம்மா எங்களை எமது பாடசாலையிலிருந்து வேறு பாடசாலைக்கு மாற்றப் போவதாக அப்பா கேள்விப்பட்டபோதே அப்பா அம்மாவை அடித்தார்.

நீதிபதி: அப்போது அம்மா எங்கேயிருந்தார்?- மேல்மாடியில் அவருக்கென்று கொடுக்கப்பட்ட அறையில் இருந்தா. நான், என் சகோதரி, அண்ணு எல்லோரும் இருந்தோம்.

நீதிபதி: எத்தனைமுறை அப்பா சவுக்கினால் அடித்தார்?- ஞாபகமில்லை.

நீதிபதி: அப்பா சவுக்கினால் அடித்தபோது அம்மா அழவில்லையா?- இல்லை.

முதலாம் எதிர்தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சியமளித்த அச்சினி கூறியதாவது:-

கடைசியாக அம்மா சாப்பிட்ட கோப்பையை நான் கழுவி வைத்தேனோ என்பது நினைவில்லை. ஆனால் அந்தக் கோப்பை கழுவப்பட்டிருந்தது. எங்கள் வீட்டிலிருந்த இரண்டு வேலைக்காரர்கள் பண்டா, குணபாலா இருவருக்கும் அம்மாவுக்கும் சரிப்பட்டு வராது. அப்படித்தான் நர்ஸும் அம்மாவும் இருந்தார்கள்.

அம்மா இறந்த தினத்தன்று நான் சிறிதுநேரம் தான் நித்திரை செய்தேன். ஹோலில்தான் படுத்திருந்தேன். அம்மாவின் பிரேத பரிசோதனைக்கு முன்னரோ பின்னரோ தந்தையும், பேத்தியும் பணிப்பெண்ணும் கைது செய்யப்பட்டார்கள் என்பது தெரியாது. ஆனால் அம்மாவின் மரணச் சடங்குகளுக்கு முன்னர் இவர்கள் கைதுசெய்யப்பட்டு விட்டார்கள்.

விசாரணை நாளை தொடர்ந்து நடைபெறும்.

## தீர்மானம் இதுதான்

அளவெட்டி, சனி மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக ஆராய்வதற்கு இன்று கூடிய அகில இலங்கை தர்மகர்த்தாக்கள் சபையின் மாநாட்டுக் கூட்டமொன்றில் கீழ்க்கண்ட தீர்மானத்துக்கிணங்கி நடப்பதென ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாவிட்டபுரத்தில் பிரமஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்ட தீர்மானம் பின்வருமாறு: பதிவாக்கிய வேத சிவாகமங்களைப் பிரமாண நூல்களாகக்கொண்டு கட்டப்பட்டும், நடத்தப்பட்டும் வரும் சைவாலய

## இறுதிக் கடன்கள்

23-7-68-இல் நடைபெற விருந்த எங்கள் தாயாரின் இறுதிக்கடன்கள் எனது மைத்துனர் திரு. வே. க. சுப்பிரமணியம் அவர்களின் மரணங்காரணமாகப் பின்போடப்பட்டுள்ளது. கா. பொ. இரத்தினம் பா. உ. 1259

## மரண அறிவித்தல்

வழக்கறிஞர் வே. க. சுப்பிரமணியம் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் திருமதி சிவபாக்கியலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் டாக்டர் சின்னராசா, டாக்டர் சிவராசா, பாலராசா, யோகேஸ்வரி, யோகராசா நிமகேஸ்வரி ஆகியோரின் தந்தையாரும் காலஞ்சென்ற கே. ஏ. வரணர், வே. க. ஆறுமுகம், திருமதி சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரரும், இன்நொச்சி கா. உ. கா. பொ. இரத்தினம், பொ. நடராசா, பொ. பாலசுப்பிரமணியம், திருமதி விநாயகமூர்த்தி ஆகியோரின் மைத்துனருமாவார் இவரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 3-ம் குறுக்குத் தெரு 40/1 இலக்க இல்லத்திலிருந்து கிள்ளாலி மயானத்திற்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். 888

## மரண அறிவித்தல்

### சிவகாமசுந்தரி

கந்தளை கனகராயர் சங்கரப்பிள்ளையின் அருமை மனைவியும், வைத்தீஸ்வர வித்தியாலய முன்னாள் அதிபர் ச. அம்பிகைபாகனின் அருமைத் தாயாருமாகிய சிவகாமசுந்தரி சிவபதமடைந்துவிட்டார். அன்னரின் சமஸ்கிரியைகள் இன்று (21-7-68) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு அவரது, கன்னாதிட்டியில் உள்ள இல்லத்தில் நடைபெறும். 1585

# "ஆலயப் பிரவேசத்தை நான் எதிர்க்கவில்லை"

## திரு. சுந்தரலிங்கம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு ஆலயப்பிரவேசத்தற்கு நான் எதிர்ப்பில்லை ஆனால் பலாத்கார ஆலயப்பிரவேசத்தைத் தான் நான் எதிர்க்கிறேன். அர்ச்சகர்கள், தர்மகர்த்தாக்கள், திருவிழாக்காரர்கள் ஊர் மக்கள் சம்மதமின்றி பலாத்காரமாக ஆலயப்பிரவேசம் நடைபெறுவதை தான் எதிர்க்கிறேன்''

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தொண்டர் சபைத் தலைவரும் முன்னாள் வவுனியா எம். பி. யுமான திரு. சி. சுந்தரலிங்கம், தமது நிருபரிடம் நேற்று மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:- நல்லூர் கந்தசுவாமி கோவில் உட்பட பல கோவில்கள் ஹரிஜனர்களுக்காக திறந்துவிடப்பட்டன. இக்கோயில்களின் அர்ச்சகர்கள், தர்மகர்த்தாக்களின் சம்மதத்துடனேயே இது நடைபெற்றது. இதனுள் இதில் நான் தலையிடவில்லை.

ஆனால் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் அர்ச்சகர்களோ, தர்மகர்த்தாக்களோ, திருவிழாக்காரர்களோ, ஆலயப்பிரவேசத்திற்கு சம்மதம் கொடுக்கவில்லை. அதனால் சிலர் பலாத்காரமாக ஆலயப்பிரவேசம் செய்ய முயற்சித்தார்கள். திருவிழா ஒழுங்காக நடைபெறுவதற்கும், இரத்தகளரி ஏற்படாமல் தடுப்பதற்குமாகவே நான் இதில் தலையிடமுன் வந்தேன். இவ்வளவு நாட்களும் பூசைகளும், திருவிழாக்களும் ஒழுங்காக நடைபெற்றன.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருவிழாக்கள் வழமைபோல் நடைபெற்று வருகிறது. கடந்த நான்கு தினங்களாக நிலவிய குழப்பமான நிலைமை இன்று முற்றாக நீங்கிவிட்டது. பூசைகளும், திருவிழாக்களும் ஒழுங்காக வழக்கமான பழைய முறைகளின்படி நடைபெறுகிறது. பெண்கள், குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான சைவ மக்கள் எவ்வித அச்சமுமின்றி கோவிலுக்கு வந்து தங்களுக்கான இடங்களில் நின்று முருகன் அருளைப் பெற்றுச் செல்கின்றனர். இனிமேலும் எவ்வித குழப்பமுமின்றி திருவிழாக்கள் வழமைபோல சிறப்பாக நடைபெறும்.

# பிறந்த குழந்தையும் தாயும் மரணம்

## காரணம் தெரியவில்லை என்கிறார் டாக்டர்

யாழ்ப்பாணம், ஞாயிறு பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட இளம்தாய் ஒருவரும், பிறந்த ஆண்குழந்தையும் நள்ளிரவில் அடுத்தடுத்து இறந்தார்கள். இம்மரணத்துக்கான காரணத்தைச் சரியாகத் தெரிவிக்க முடியாதிருப்பதாக சிகிச்சையளித்த டாக்டர் மரண விசாரணையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள பிரசவவார்ட்டில் நடைபெற்ற இந்தச் சம்பவம் இங்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் பிரசவத் தாய்மார் மத்தியிலும் பெரும் பீதியை உண்டு பண்ணியுள்ளது. இந்த இரு மரணமும் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது.

மரணமான உடுவிலைச் சேர்ந்த சிவபாக்கியத்தினதும், (21 வயது) அவரது குழந்தையினதும் மரணம் பற்றி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். இராசநாயகம் மரண விசாரணை நடத்தினார்.

சம்பவம் நடந்த அன்று மாலை சிவபாக்கியம் பிரசவத்திற்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும், இரவு 9-30 மணியளவில் அவர் ஓர் ஆண் குழந்தையைப் பிரசவித்ததாகவும், ஆனால் பிறந்த குழந்தை நள்ளிரவில் இறந்ததாகவும் அதனைத்தொடர்ந்து தாயும் இறந்ததாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரணமான தாயினதும், குழந்தையினதும் மரணத்துக்கான காரணங்களை சரியாகத் தெரிவிக்க முடியாதிருப்பதாக அவர்களுக்குச் சிகிச்சையளித்த டாக்டர் தெரிவித்ததைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைக்கு மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

இந்த மர்ம மரணங்கள் பற்றிய புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. (ஈ. நி.)

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 3-ம் திருவிழா வாகிய இன்று காலை 9-30 மணிக்கு வசந்தமண்டபூஜையும் மாலை 6 மணிமுதல் இரவு 7-30 மணிவரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் ஆசிரியர் 'மங்கையர்க்கரசி' என்னும் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். இரவு 7-30 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் நிகழும்.

## பாகிஸ்தானுக்கு...

3-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய சர்வதேச சூழ்நிலையில் ஒவ்வொரு நாடும் மற்றைய நாடுகளுடனான தனது பேதங்களையும் சச்சரவுகளையும் தீர்க்கவும், சிநேகபூர்வமான தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் முனைந்து வருவதாகத் தெரிவித்தார். இந்தப் பின்னணியில்தான், பாகிஸ்தானுடனான ரஷ்ய நட்புறவுத் தொடர்பு முயற்சிகளை நாம் அவதானிக்க வேண்டுமென்றார் அவர்.

## அயூப்கானுக்கு கொஸிஜின் செய்தி

இதற்கிடையில் ராவல்பிண்டியில், ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினின் செய்தியொன்றை அங்குள்ள ரஷ்ய தூதுவர், பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானிடம் ஒப்படைத்துள்ளார். செய்தியின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

களில் எந்தவகை இருந்த ... ம் சிற்றறிவினராகிய நாம் ... கும்.

## சத்தியாக்கிரகம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சப்பறம் இணைக்கும் வேலை மிகவேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அர்ச்சகர் ஊர்வலப் பாதையால், பக்தர்கள் கோயிலுள் மண்டபத்திற்குச் சென்று திரும்பியவண்ணமிருந்தனர்.

வெளிவீதியில் எங்கும் கற்பூர வாசனையும், பக்திப் பாடல்களும் அடியார்களின் 'அரோகரா' கோஷமும் தொடர்ந்து இருந்தது.

நான்கு வீதியிலும்பொலிசார் கண்காணித்துக்கொண்டிருந்தனர். கோயில் முன்வாசலில் பொலிசார் அதிகமாகக் காணப்பட்டனர். பூசைகள் ஒழுங்காக நடைபெற்றன.

## குடங்கள் களவுபோனதா?

### தொடர்புகொள்ளவேண்டுமாம் பொலிசார்

யாழ்ப்பாணம், ஞாயிறு 2 செம்புக் குடங்களைக் கையில்கொண்டுவீதிவழியே சென்றுகொண்டிருந்த இரண்டுவாலிபர்கள் நேற்று சந்தேகத்தின்பேரில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரத்தினவடிவேலு, திருநெல்வேலியைச்சேர்ந்த கந்தையா விக்னேஸ்வரன் ஆகியோர் வைத்திருந்ததாகக் கூறப்படும் இரு குடங்களில், ஒரு குடத்தின் அடிப்பாகத்தில் நெளிவுண்டாம், மற்றையகுடத்தின் மேல்பாகத்தில் பூக்கள் கீறப்பட்டு அலங்காரம் தீட்டப்பட்டுள்ளனவாம்.

இக் குடங்களைக் களவு கொடுத்த குடத்தின் சொந்தக்காரர் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## ரூ. 750 பிணை

குரும்பசிட்டி, சனி பண்டத்தரிப்பைச் சேர்ந்த 18 வயதான கன்னி மாணவி ஒருவரை நடுத்தெருவில் சென்றுகொண்டிருக்கையில், காரில் வந்த கோஷ்டியொன்றினால் கடத்திச் செல்லப்பட்டது சம்பந்தமாக மல்லாகம் பதில் மாஜிஸ்திரேட் திரு. ஆர். இளையபெருமாள் ஏற்கனவே றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த மொத்தம் 11 சந்தேகநபர்களில் இராமகிருஷ்ணன் என்பவரைப் பொலிசாரின் அனுமதியுடன் விடுதலைசெய்துள்ளார். சுப்பிரமணியம், பொன்னுத்துரை என்ற மேலும் இரு நபர்களை தலா 750 ரூபா பிணை செலுத்திச் செல்லுமாறு உத்தரவிட்டார்.

தற்போது றிமாண்டில் இருக்கும் பெண்மணி ஒருவர் உட்பட ஏனைய 8 சந்தேகநபர்கள் மீண்டும் இம்மாதம் 25ந் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவர். பொலிஸார் இவர்களுக்கு எதிராகக் குற்றஞ்சுமத்தி அன்றைய தினம் வழக்குத் தாக்கல்செய்வர்.

யாழ்ப்பாணம், ஞாயிறு பூநகரி சக்தி சனசமூக நிலைய மாநாட்டுக் கூட்டத்தில் வாசிகசாலையை மிக விரைவில் கட்டிமுடிக்க வேண்டுமென்னும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. [ந. நி.]

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org